குன்னத்தூர் ஊராட்சிமன்றதலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி P.கீதா

ந.க.எண் : 07/2023-2024 நாள் : 27-02-2024

பொருள் :கோயம்புத்தூர்மாவட்டம் - அன்னூர்ஊராட்சிஒன்றியம் , குன்னத்தூர்ஊராட்சி மற்றும் கிராம க.ச.எண்கள் : 49/1B1A&49/1B2A-ல் 2.05ஏக்கர் அல்லது 8301.00ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கான ஊராட்சி அனுமதி வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :

1.சாலை அமைப்பு மற்றும் பொதுஒதுக்கீடு தானப்பத்திரம் மூலம் வழங்கியது – பத்தர பதிவுத்துறை பத்திரஎண் : 1127/2024 . நாள் : 30.01.2024.

2.மனைப்பிரிவு – நகர ஊரமைப்புதுறை இணைஇயக்குநர்/உறுப்பினர்செயலர், கோயம்புத்தூர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் : CBLPA/I4XJHSK2/2024/TCP நாள் : 23-01-2024

3.கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர்/இணைஇயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் வரைபட அனுமதிஎண்:ம.வ/கோ.ம.எண்:78/2024 நாள்:17-02-2024 வழங்கப்பட்டுள்ளது.

4.MAASS REALTORS, 282B, KARTAR COMPLEX, SALEM – CUDDALORE MAINROAD, ATTUR, SALEM 636108 அவர்களின்விண்ணப்பநாள் : 17-02-2024.

5.ஊராட்சி வளர்ச்சிகட்டணம் செலுத்திய இரசீதுஎண் : 18267 நாள் : 27-02-2024

6.அபிவிருத்தி கட்டணம் செலுத்திய இரசீதுஎண் :18266 நாள் : 27-02-2024

உத்தரவு:

1.பார்வையில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து கடிதங்கள் மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழுமம் இணைஇய்க்குனர்/உறுப்பினர் செயலர்அவர்களின் ந.க.எண் : CBLPA/I4XJHSK2/2024/TCP நாள் :23-01-2024-ன் படி கோயம்புத்தூர்மாவட்டம், அன்னூர்வட்டம், குன்னத்தூர்ஊராட்சி மற்றும் கிராம க.ச. எண்கள் 49/1B1A & 49/1B2A-ல் 2.05 ஏக்கர் அல்லது 8301.00 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு வரைபட அனுமதிஎண்:ம.வ/கோ.ம.எண்:78/2024 நாள்:17-02-2024 எண்ணின்படி திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும் மேலும் மேற்கண்ட மனைப்பிரிவில் குன்னத்தூர் ஊராட்சிக்கு தானமாக வழங்கக்கூடிய சாலைகள் மற்றும் பூங்காவிற்கான பொதுதிரவிடங்கள் ஆவணபதிவுஎண் : 1127/2024, நாள் : 30-01-2024 - க்கும் TANGEDCO சேர்த்து அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவணபதிவுஎண் : 1127/2024 , நாள் :30-01-2024 மூலம் பதிவுசெய்யப்பட்டு மேற்படி அசல் ஆவணமும் ஊராட்சியில் பெறப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு பரிசீலனைகட்டணம் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. இரசீதுஎண் : 18266 நாள் : 27-02-2024 மேலும் மனைபிரிவிற்கு ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானஎண் : 79 நாள் :12-02-2024 எனவே மேற்குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவுக்கு இதன்மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1.மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள் அரசுபுறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு அடுத்தநிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை உத்தேசசாலை மற்றும் ரயில்தண்டவாளம் பொதுப்பாதை மற்றும் நிலஉச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனைஇடம் அதிக உயர்மின்னழுத்த பாதை போன்றவை அமைந்திருக்கக்கூடாது.

2.மனைப்பிரிவு கட்டமைப்பு (Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமல் இருப்பின் மின்சாரம், குடிநீர், கழிவுநீர், வடிகால் அமைப்புதுண்டிக்கப்படும்.

3.மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

4.இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்கசான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர்(பொறுப்பு) கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழுமம் அவர்கள் உறுதிசெய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்துசெய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5.இம்மனை பிரிவில் அமையக்கூடிய தனிமனைகளுக்கு வீடுகட்ட வரைபடம் அங்கீகாரம் வழங்கும்போது அடிப்படைவசதிகள் அனைத்தும் நிறைவேற்றிய பின்னர்தான் வரைபடம் அங்கீகாரம் வழங்கப்படும்.(குடிநீர்வசதி, சாக்கடைவசதி, தெருவிளக்கு வசதி மற்றுமசாலைவசதி).

6.மேலும் உள்ளூர் திட்டகுழுமத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இணைப்பு :வரைபடம்

தலைவர் / செயல்அலுவலர்
குன்னத்தூர்ஊராட்சி
தலைவர் / செயல் அலுவலர்
குன்னத்தூர் ஊராட்சி
21/02/24

பெறுநர்:

MAASS REALTORS,
282B,KARTAR COMPLEX,
SALEM – CUDDALORE MAINROAD,
ATTUR,SALEM - 636108

நகல்கள்:

1.கோயம்புத்தூர் உள்ளூர் -திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் ,

2.சார்பதிவாளர் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், அன்னூர் .